Grant
2020-21

IQAC

# தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம்

பொன்னி, 31, பி.எஸ்.குமாரசாமி சாலை, சென்னை—600 028
தொலைபேசி – 044 – 2493 7471.

முனைவர் மு. இராமசுவாமி
உறுப்பினர்—செயலாளர்

கடித எண். 466/அ1/2021, நாள் 09.12.2021

அன்புடையீர்,

பொருள்: தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் – இயல், இசை, நாடகம், நாட்டியம் மற்றும் கிராமியக் கலை விழா – இயல் துறையில் கருத்தரங்கள் நடத்துதல் – தகவல் தெரிவித்தல் – தொடர்பு.

பார்வை: விருதுநகர் இந்து நாடார்ஸ் செந்திகுமார நாடார் கல்லூரி, முதல்வர் டாக்டர் பி. சுந்தரபாண்டியன் அவர்களின் மின்னஞ்சல்

பார்வையில் கண்டுள்ள தங்களது மின்னஞ்சல் வாயிலாக, கல்லூரியிலிருந்து கருத்தரங்கம் நடத்துவதற்காக நடைபெறும் தேதி, இடம், கருத்தரங்கத் தலைப்புகள், கருத்தரங்க பேச்சாளர்களின் விவரம் மற்றும் உத்தேச மதிப்பீட்டு விவரம் மன்றத்திற்கு கிடைக்கப்பெற்றது. அவற்றின் விவரம் பின்வருமாறு:-

விருதுநகர் – விருதுநகர் இந்து நாடார் செந்திகுமார நாடார் கல்லூரி

| வ. எண். | நாள் / கிழமை | நடைபெறும் இடம் | கருத்தரங்க தலைப்பு | கருத்தரங்க பேச்சாளர் விவரம் |
|---|---|---|---|---|
| 1. | 27.12.2021 (திங்கட் கிழமை) | கனகமணி கூட்ட அரங்கம், விருதுநகர் | அண்மைக்கால அகழாய்வுகள் | திரு. சாந்தலிங்கம், தொல்லியல் அறிஞர் |
| 2. | | | கீழடி | திரு அமர்நாத் ராமகிருஷ்ணன், இந்திய அரசு தொல்லியல் துறை |
| 3. | 28.12.2021 (செவ்வாய்க் கிழமை) | | சங்க கால வணிகம் | பேராசிரியர் கா.ராஜன், தொல்லியல் அறிஞர் |
| | | | தொல்லியல் நோக்கில் சங்க இலக்கியம் | திரு.ர. பூங்குன்றன், தொல்லியல் அறிஞர் |

## <u>செலவினங்கள் திட்ட மதிப்பீடு:-</u>

| வ.எண். | விவரம் | தொகை ரூ. |
|---|---|---|
| 1. | மதிப்பூதியம் 10000x4 | 40,000/– |
| 2. | அழைப்பிதழ், பிளக்ஸ் | 5,000/– |
| 3. | சான்றிதழ் | 5,000/– |
| 4. | பிற கல்லூரி மாணவர்கள் 100 பேருக்கான மதிய உணவு<br>27.12.2021 – 100xரூ.100=10,000/–<br>28.12.2021 – 100xரூ.100=10,000/– | 20,000/– |
| 5. | விருதுநகர் இந்து நாடார் செந்திகுமார நாடார் கல்லூரி மற்றும் பிற கல்லூரி மாணவர்களுக்கான தேநீர்<br>தேநீர் ரூ.10x300=3000<br>வடை ரூ.7x 300=2100<br>முற்பகல், பிற்பகல் இரண்டு நாட்களுக்கு | 20,400/– |
| 6. | போக்குவரத்து செலவினம் | 13,500/– |
| | மொத்தம் | 1,03,900/– |

மேற்குறிப்பிடப்பட்டுள்ள உத்தேச மதிப்பீடு செலவினத் தொகையில் ரூ.90,000/– (ரூபாய் தொன்னூறாயிரம் மட்டும்) வழங்க, தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் ஒத்துக்கொள்கிறது. தங்கள் கல்லூரியுடன் இணைந்து இக்கருத்தரங்கம் நடத்துவதற்குப் பின்வரும் மன்ற நிபந்தனைகளுக்குட்பட்டு, இசைவினை அளிக்கிறது:-

1. கருத்தரங்கம் நிகழ்வு நடத்துவதற்கான ஒலி–ஒளி அமைப்பினை தங்களது கல்லூரி ஏற்பாடு செய்து தர வேண்டும்.

2. கருத்தரங்க அழைப்பிதழ் மற்றும் விளரம்பங்களில் தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்துடன் இணைந்து நடத்தப்படும் என அச்சிடப்பட வேண்டும்.

3. கருத்தரங்கப் பேச்சாளர்களின் மதிப்பூதியம் மன்றத்தால் நேரிடையாத பேச்சாளர்களின் வங்கி கணக்கிற்கு மின்பண பரிவர்த்தனை மூலம் செலுத்தப்படும்.

4. கருத்தரங்கப் பேச்சாளர்களின் வங்கி பற்றி முழுமையான விவரம், வங்கியின் பெயர் மற்றும் கிளை, கணக்கு எண்., ஐ.எப்.எஸ்.சி எண் ஆகியவற்றைப் பெற்று மன்றத்திற்கு உடனே தெரிவிக்கப்பட வேண்டும்.

5. தங்களால் குறிப்பிடப்பட்டுள்ள மதிப்பீடு தொகையில் மதிப்பூதியம் நீங்கலாக மீதமுள்ள தொகையில் 50 சதவிகிதம் முன்பணம் வழங்கப்படும். மீதமுள்ள தொகையினை தங்களிடமிருந்து கருத்தரங்கம் தொடர்பான அறிக்கை, புகைப்படங்கள் ஆல்பம், காணொலிக் குறுந்தகடு, விழா தொடர்பான செலவின விவரங்கள் கிடைக்கப் பெற்றவுடன் வழங்கப்படும்.

6. அமைப்புச் செலவின தொகைக்கான காசோலை யார் பெயரில் வழங்கப்பட வேண்டும் என்ற விவரத்தினை மன்றத்திற்கு தெரியபடுத்தவும்.

இக்கடிதம் கிடைக்கப்பெற்றவுடன் தங்களது எழுத்துபூர்வமான ஒப்புதலை உடன் மன்றத்திற்குத் தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

உறுப்பினர்–செயலாளர்

பெறுநர்

Dr.P.Sundara Pandian,
Principal,
Virudhunagar Hindu Nadar's Senthikumara Nadar College,
Virudhunagar – 626 001.